மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 79/2019 மற்றும் 38/2020</u>

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ம் நாள் சனிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>16.11.2024 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என் தாத்தா பெயர் நாச்சியாண்டி பண்டாரம் என்றால் சரிதான். அவருக்கு சுப்பண பண்டாரம் ஒரே மகன் என்றால் சரிதான். என் தாத்தா நாச்சியாண்டி பண்டாரம் இறந்து சுமார் 40 ஆண்டுகள் இருக்கும். என் தகப்பனார் சுப்பண்ண பண்டாரம் இறந்து சுமார் 30 ஆண்டுகள் இருக்கும். என் தகப்பனாருக்கு நானும் தண்டபாணி மட்டும்தான் ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். என் சகோதரர் தண்டபாணி 2015ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தண்டபாணிக்கு சிதம்பரம் பழனிச்சாமி என்ற இரண்டு மகன்களும் மற்றும் சரஸ்வதி என்ற மகளும் வாரிசுகளாக உள்ளார்கள் என்றால் ஆமாம். தண்டபாணியின் ஆண் வாரிசுகளான சிதம்பரம் மற்றும் பழனிச்சாமி தான் இந்த வழக்கை போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தண்டபாணியின் பெண் வாரிசான சரஸ்வதி இறந்துவிட்டார் என்றும்

அவருக்கு இரண்டு மற்றும் மூன்றாம் பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்தை என் தாத்தா எப்போது கிரையம் பெற்றார் என்றால் அது எனக்கு தெரியாது. என் தாத்தா கிரயம் பெற்ற ஆவணத்தை வாதிகள் வா.சா.ஆ.1 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் முதலில் காங்கேயம் கிராமத்திலும் தற்போது வீரணம் பாளையம் கிராமத்திலும் உள்ளது என்றால் சரிதான். என் தாத்தா வாங்கிய கிரைய ஆவணத்தில் நீள மற்றும் அகலங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கிழமேல் 34 முழம் என்றும் தென்வடல் 46 முழம் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை அடி கணக்கில் மாற்றம் செய்தால் கிழமேல் 55 1/2 அடியும் தென்வடலில் 69 அடியும் வரும் என்றால் சரிதான்.அந்த அளவுகளின் படி தாவா சொத்தானது 8 சென்ட் விஸ்தீரணத்தில் உள்ளது என்றால் சரிதான்.

ஆவணங்கள் பார்வையிட வேண்டும் என்ற வாதி தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளின் பேரில் பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2024.11.16 19:01:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்